**தலைப்பு 259 – மாத்தளை மாவட்ட செயலகம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 259 - மாத்தளை மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்த லொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் 1.6(அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியிருக்கவில்லை

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இறுதி மீதிகள் மீளாய்வாண்டின் நிதி கூற்றுகளில் ஆரம்ப மீதிகளுடன் ஒப்பிடும்போது ரூபா 1,281,996 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2023 ஏப்ரல் 24 ஆம் திகதிய DSM/ACC/8 ஆம் இலக்க கடிதத்தில் இந்த இணக்கமின்மை தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்திடமிருந்து ஆலோசணைகளை பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | இணக்கமின்மைகள் இனங்கானப்பட்டு கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிதி அல்லா சொத்துகளுக்குரிய திறைசேரி கணக்குகள் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் சேர்க்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் அளவு ரூபா 4,156,108 ஆக இருந்த போதும் பரீட்சை மீதியின் பிரகாரம் அது ரூபா 4,027,588 ஆக இருந்தமையால் ரூபா 128,520 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 2023 ஏப்ரல் 24 ஆம் திகதிய DSM/ACC/8 ஆம் இலக்க கடிதத்தில் இந்த இணக்கமின்மை தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்திடமிருந்து ஆலோசணைகளை பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | திறைசேரி கணக்கு கூற்றுக்களின் மீதிகள், மாவட்ட செயலகத்தின் மீதிகளுடன் ஒப்பிடப்பட்டு கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | திறைசேரி கணக்குகள் கூற்றன் பிரகாரம் போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் சொத்துக்கள் வகையின் கீழ் நடப்பாண்டில் கையகற்றல் ரூபா 4,666,239 ஆக இருந்த போதும் பரீட்சை மீதியின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 5,740,214 ஆக | 2023 ஏப்ரல் 24 ஆம் திகதிய DSM/ACC/8 ஆம் இலக்க கடிதத்தில் இந்த இணக்கமின்மை தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்திடமிருந்து ஆலோசணைகளை பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | திறைசேரி கணக்கு கூற்றுக்களின் மீதிகள், மாவட்ட செயலகத்தின் பரீட்சை மீதிகளுடன் ஒப்பிடப்பட்டு கணக்குமீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இருந்தமையால் ரூபா 1,073,975 ஆன வேறுபாடு காணப்பட்டது. | | |
| (ஈ) கலேவல பிரதேச செயலகத்திற்குரிய 17,586,000 ஆன 03 கட்டிடங்கள் நிதி அல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீட்டுப் பெறுமதி கிடைத்தவுடன் கணக்கீடு செய்யப்படுவதாக | அனைத்து சொத்துக்களும் நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக வழங்குநர் நிறுவனத்திற்கு சேவைகளைப் பெற்றுக் கொள்ளாத தினங்களுக்காக ரூபா 99,356 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | சுத்திகரிப்பு சேவைகளை வழங்குகின்ற நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யும்போது இவ்வாறான நிலைமைகளுக்காக கழிப்பதற்கு இணக்கப்பாடு ஒன்று இல்லாமையால் அறவீடு ஒன்று மேற்கொள்ள முடியாமல் இருந்ததாக | கொடுப்பனவு செய்யும் போது ஒவ்வொரு மாதத்திலும் வேலை செய்த நாட்கள் அடிப்படையாக கொள்ளப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அடையாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரத்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆடுகளைப் பகிர்ந்தளிக்கும் செயற்திட்டத்தின் மூலம் 24 நலனாலிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 38 விலங்குகளில் 13 மரணித்திருந்ததுடன், தேயிலை நாற்றுக்கள் பகிர்ந்தளிக்கும் செயற்திட்டத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட 7,000 நாற்றுக்களில் 1428 சிதைவடைந்திருந்ததுடன் 1050 நாற்றுக்கள் வளர்ந்திருக்கவில்லை | அதிக குளிர் நிலைமையால் விலங்குகள் மரணித்திருந்தன. இறந்த விலங்குகளுக்காக இழப்பீட்டினை பெற்றுக் கொள்வதற்காக விவசாய காப்புறுதி சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>தேயிலை நாற்றுக்களின் பராமரிப்பு தொடர்பாக சிறு தேயிலை தோட்ட அதிகாரசபையின் செயற்திட்ட உத்தியோகத்தர்கள் மூலம் நலனாலிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் இறந்த நாற்றுகளுக்கு புதிய நாற்றுக்களை பயிரிடுவதாக அறிவித்துள்ளதாக | செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது சாத்தியவள அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கொள்ள வேண்டியதுடன் சரியான பின்தொடர் நடவடிக்கை செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும் |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அடையாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஏப்ரல் 07 ஆம் திகதி வரையில் ரூபா 2,608,000 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் மேலும் மேற்கொள்ள வேண்டிய வேலை பகுதிகள் காணப்படுவதன் காரணமாக மிளகு தயாரிக்கும் நிலைய கட்டிடம் விளைவற்று காணப்பட்டது | வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 3.17 மில்லியனான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நிதி கிடைத்த பின்னர் வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியுமென | நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு நோக்கத்துக்கு உட்பட்ட செயற்படுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பிரம்பு, பித்தளை, களிமண், தளபாடம் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சிடமிருந்து ரூபா 413,987 ஆன அரசின் பங்களிப்பின் பேரில் லக்கல மற்றும் யட்டவத்த பிரதேச செயலக பிரிவுகளில் நலனாலிகளுக்கு மீளாய்வாண்டில் ஜனவரி முதல் ஜூன் வரையான காலப் பகுதியில் வழங்கப்பட்டிருந்த 06 சுயதொழில் உபகரணங்களைப் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்காத நலனாளிகளின் உபகரணங்களை மீளப் பொறுப்பேற்று பொருத்தமான நலனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக | குறித்த உபகரணங்களை நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்த வேண்டும் |
| (இ) | வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் லக்கல பிரதேச செயலக பிரிவுகளில் மினி ரன்கெட்டிய பைகள் மற்றும் சப்பாத்து உற்பத்தியாளர்கள் சங்கத்துக்கு 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 88,900 ஆன அச்சிட்டு இயந்திரம் மற்றும் 02 கிராம சேவையாளர் பிரிவுகளின் நலனாளிகளுக்காக 2022 ஒக்டோபர் 03 ஆந் திகதி மற்றும் 20 ஆந் திகதிகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,100,000 ஆன 04 மிளகு அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் 04 மிளகு தூளாக்கும் இயந்திரங்கள் (Pepper Thresher ) 2023 பெப்ரவரி 24 பரிசோதனை திகதி வரையிலும் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை | அச்சீட்டு இயந்திரங்களுக்காக நிதி ஏற்பாடு கிடைத்ததன் பின்னர் பயிற்சிகளை வழங்கி குறித்த இயந்திரங்களை பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் மிளகு அறுவடை குறைவடைந்த காரணத்தால் அரைக்கும் இயந்திரங்களின் பாவனை குறைவடைந்துள்ளதால் அறுவடையை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பதாக | குறித்த இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஈ) சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தம்புள்ளை பிரதேச செயலகப் பிரிவில் பெரிய வெங்காய விதைகள் உற்பத்திக்காக உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கத்தில் 2022 பெப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய மாதங்களில் திகம்பத்தன பெரிய வெங்காய விதை உற்பத்தி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,246,365 ஆன 04 புல் வெட்டும் இயந்திரங்களும் 03 கொம்போஸ் தூளாக்கும் இயந்திரங்களும் கலுந்தேவ - பரணகம பெரிய வெங்காய விதை உற்பத்தி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 444,000 ஆன 03 சிறு கை உழவு இயந்திரங்கள் 2023 பெப்ரவரி 07 பரிசோதனை திகதி வரையிலும் விளைவற்று காணப்பட்டன | சிறு போகத்தின் போது இந்த பொருட்களை பயன்படுத்தி பெரிய வெங்காயம் மற்றும் விதை உற்பத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளில் ஒழுங்குப்படுத்தி உள்ளதாக | செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 3.3 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் முன்னேற்றமடையாதிருந்த திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரத்ததோட்ட, லக்கல, வில்கமுவ, அம்பன்கங்க கோரலே மற்றும் நாவுல பிரதேச செயலக பிரிவுகளில் கிராம சக்தி வியாபாரத்திற்காக 04 ஆண்டுகளுக்கு முன்னர் 59 கிராம சேவையாளர் பிரிவுகளின் சங்கங்களுக்கு வழங்கப் பட்டிருந்த ரூபா 19,700,715 தொகை நோக்கத்திற்கு உட்பட செயற்பாடுகளுக்கு பயன் படுத்தப்படாமல் வங்கிக் கணக்குகளில் விளைவற்று காணப்பட்டன. | செயலற்ற சங்கங்களை மீண்டும் செயற்பாடு நிலைக்கு கொண்டு வருவதற்காக இந்நாட்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | குறித்த நிதியங்களை பயன்படுத்தி நோக்கத்துக்கு உட்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாத்தனை பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளர் இடமாற்றம் பெற்றுச் சென்றதன் பின்னர் 2021 ஜனவரி 11 ஆந் திகதி முதல் 2022 நவம்பர் 29 வரையான காலப்பகுதியில் பிரதேச செயலாளருக்குரிய, அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருந்த போதும் அக்காலத்திற்காக வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை | அறவிடப்பட்ட வேண்டிய தொகையில் ரூபா 29,558 வீதம் 12 தவணைகளில் அறவிடப்படுவதாக | குறித்த வீட்டு வாடகை அறுவிடப்பட வேண்டும். |

### 4. நல்லாளுகை

**பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் வில்கமுவ பிரதேச செயலக பிரிவில் 09 கிராம சேவையாளர் பிரிவுகளில் மினி சூறாவளி நிலைமை காரணமாக 30 வீடுகளுக்காக ஏற்பட்டிருந்த சேதங்கள் மற்றும் காட்டு யானைகளினால் சேதமடைந்த 06 இடங்களுக்காக ரூபா 1,782,898 கூட்டுத்தொகையான இழப்பீட்டினை மீளாய்வாண்டின் இறுதி வரையில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிதி ஏற்பாடு கிடைக்காததன் பேரில் கொடுப்பனவு செய்ய முடியாமல் இருந்ததுடன் கட்டுநிதி கிடைக்கும் பிரகாரம் முன்னுரிமை அளித்து கொடுப்பனவினை செய்வதாக | இழப்பீட்டுத் தொகையை கொடுப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 2016 ஏப்ரல் 11 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 4 ஆம் உப பிரிவின் பிரகாரம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு போஷாக்கு படிகள் வழங்குவதில் பிரதேச மட்டத்திலான பொறுப்பு மற்றும் கண்காணிப்பு பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் மாத்தளை மற்றும் நாவுல பிரதேச செயலகப் பிரிவுகளில் நலனாலிகளால் 2015 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 4,030,000 ஆன போஷாக்கு பொதிகளைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | போஷாக்கு படிகளைப் பெற்றுக்கொள்ளாத தாய்மார்கள் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுப்பதாகவும் அவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் இருந்தால் பிரதேச செயலாளர்கள் ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | போஷாக்கு பொதிகளை பெற்றுக் கொள்ளாமை தொடர்பாக தொடர்பான விடயங்களை ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பதவியணியினர் 189 வெற்றிடங்களும் 329 மிகைகளும் காணப்பட்டன. | பதவியணி ஆட்சேர்ப்பு அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகிறதால் வெற்றிடங்கள் தொடர்பாக அவ்வப்போது அறிக்கை இடப்படுகின்றது | வெற்றிடங்கள் மற்றும் மிகைகளை ஆராய்ந்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட் வேண்டும் |